நிறைவேற்றப்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கருத்தும் செயல்படுகிற நடைமுறையிலே வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு ஒரு ஊருக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? என் தொகுதியில்—பழனி—தமிழ் நாட்டில் மிகப்பெரிய யாத்திரிக தலமாக இருக்கிறது. அதை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தலங்கள் என்று அறிவிப்பதற்கு எந்த அடிப்படைத் தகுதிகளை வைத்து அறிவிக்கின்ற திட்டம் எதுவும் அரசிடம் இல்லை, நடைமுறையிலும் இல்லை. மக்களாகவே அதிக அளவில் சென்று அந்த இடத்தைப் பார்க்கிறார்கள் என்றால் அல்லது அதிக அளவில் அந்த இடத்திற்கு போகிறார்கள் என்றால், அந்த விவரங்கள் அரசுக்கு தெரிந்ததற்குப் பிறகு, அந்த இடத்திலே மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே தான் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. பழனியைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால், விவரமாக பரிசீலித்து பதில் தரச் செய்யலாம்.

வடாற்காடு மாவட்டம் அமிர்த்தி என்னுமிடத்திலுள்ள மிருகக் காட்சி சாலை.

*வினா எண் 211—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் அமிர்த்தி என்னும் இடத்தில் மிருகக் காட்சி சாலை இருப்பது உண்மையா?

(ஆ) இதனை வனத்துறை மூலம் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

(இ) இப்பகுதியை சுற்றுலா பகுதியாக மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : (அ) ஒரு சிறிய மிருகக்காட்சி சாலை அங்கு உள்ளது.

(ஆ) இது பரிசீலனையில் உள்ளது.

(இ) இந்த இடத்தை ஒரு மாவட்ட உலாத்தலமாக மாற்றுவது வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

1983 பிப்ரவரி 10]

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வடாற்காடு மாவட்டத்திலே இருக்கிற அமிர்த்தி காடு ஒரு நல்ல இயற்கை காட்சிகளை பார்க்கிற இடமாகவும் இருப்பதோடு, படத்துறையில் இருப்பவர்கள் எல்லாம் அங்கே வந்து படம் எடுக்கக்கூடிய இடமாகவும் இருப்பதால், அதனை சுற்றுலாத்தலமாக ஆக்கும்போது, பெரிய அளவில் சென்டராக ஆக்கும் வகையில் அதன் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மிகச் சிறிய அளவிலே ஒரு மிருகக்காட்சி சாலை இருக்கிறது. அங்கே மக்கள் வந்து பார்த்துச் செல்லக்கூடிய வகையில், பறவைகள் போன்ற இனங்களையும் சேர்த்து 181 மிருக இனங்கள் இருக்கின்றன. இந்த 1981-82 ஆம் ஆண்டில் 30 ஆயிரம் ரூபாய் இந்தப் பகுதிக்கென்று ஒதுக்கப்பட்டு, சாலை அமைக்கவேண்டிய பணி அமிர்த்தியிலிருந்து கின்னிக்குளம் வரையில் சாலை செப்பனிடும் பணி தொடங்கப்பட்டு அது தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஒட்டி, அந்தப் பகுதியை மக்களைக் கவர்கின்ற வகையில், மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே ஆலோசித்து அதனைச் சுற்றுலாத்தலமாக ஆக்க அரசு பரிசிலிக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமிர்த்தி சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக இருப்பதால், ஆயிரக்கணக்கான மக்கள் சென்று பார்க்கிற இடமாக மாற இடம் இருப்பதால், அப்படிச் செல்கிற பொது மக்களுக்குத் தங்குவதற்கு அந்த இடத்திலே தங்கும் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பொதுமக்கள் போய் தங்குவதற்கு முதலிலே போக்குவரத்து வசதி வேண்டும். போக்குவரத்தை அங்கே உருவாக்குவதற்கு அடிப்படை தேவை சாலை வசதிகள். தேவைப்படுகிற ஒரு குறிப்பிட்ட அளவு லெவலில் இப்போது சாலை வசதி இல்லை. அந்தச் சாலையை போட வேண்டும் என்கிற அந்தத் திட்டம் இப்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. அது முடிவடைந்ததற்குப் பிறகு, எவ்வளவு பேர்கள் அங்கே தங்குவதற்கு வருவார்கள் என்பதை கணக்கிலே கொண்டு, பிறகு அங்கே தங்குவதற்குகான இடங்கள் அமைப்பது குறித்து அரசு ஆலோசிக்கும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அமிர்த்திக்கு அருகிலே ஏலகிரிமலை என்கிற ஒரு மலை இருக்கிறது. அமிர்த்தியை சுற்றுலாத்தலமாக விஸ்தரிக்கவேண்டும் என்கிற நிலை அரசாங்கத்தின் ஆய்விலே

இருப்பதால், அமிர்த்தியை விஸ்தரிக்கின்ற பணியிலேயே இந்த ஏலகிரி மல்லயையும் இணைத்தால், மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக இரண்டும் அமையும், ஆகவே அதைச் செய்ய அரசு ஆலோசிக்குமா என்பதை என் வேண்டுகோளாக அல்ல—இரண் டையும் இணைக்க வேண்டும் என்கிற என் கோரிக்கையை—அரசு ஏற்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, முதலிலே அமிர்த்தியை முடித்து விட்டு, அதற்குப் பிறகு, ஏலகிரியை விஸ்தரிக்க இயலுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

கூவம் நதியின் கரை ஓரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம்.

*வினா எண். 212 —**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. எம். சின்னசாமி:** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கூவம் நதியின் கரை ஓரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கூவம் மற்றும் பக்கிங்ஹாம் நதிக்கரையில் நிழல் தரும் மரங்களையும் அழகுதரும் மரங்களையும், ஆக்கிரமிப்பு இல்லாத இடங்களில், வனத் துறையினரால் நடுவதாக முடிவெடுக்கப்பட்டு 1982-83 ஆம் ஆண்டில் கூடுமானவரை அதிக இடங்களில் மரங்கள் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மீதமுள்ள பகுதிகளில் 1983-84 ஆம் ஆண்டில் மரங்கள் நடப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்கள் நடப்பட்டுக் கொண் டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா ? அத்தோடு அப்படி நடுகிற மரங்கள் அரசுக்கு வருவாயைத் தருகிற வகையில் பயன் தரும் மரங்களை வைக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்த மரம் நடுகின்ற திட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நேரத்திலே அவற்றில் பல பகுதிகள் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்ற காரணத்தால், பொதுப்பணித் துறை அந்த ஆக்கிர மிப்புகளை அகற்ற நடவடிக்கையிலே இறங்க வேண்டும் என்று